இலாஹி

திருநெல்வேலி ஜில்லா மேலப்பாளையம்
புதுமனை சறக்கிமுப்பன்தெருவில் வாசஞ்செய்யும்
ஜனுபு பீ. ம. சாகுல்ஹமீதுலெப்பை
அல்ஆலிமுல் ஹாபிழு
அவர்களின் செல்வக்குமாரருகிய
ஜனுபு முஹம்மதுமுஹியித்தீன்
மஸ்தான்லெப்பை அவர்களால்
இயற்றப்பட்ட

# பாத்திமா நாயகி
## தோத்திரமெஞ்ஞான
## அருளானந்தகீர்த்தனைக்கும்மி.

இதை
மேலப்பாளையம், சங்கீத மகா வித்வான்
ஷாஹுல் ஹமீது புலவரவர்களின்
குமாரருகிய நாகூர் தர்ஹாவாயல் வித்வான்
மெஞ்ஞான அருள்வாக்கியப் புலவருமாகிய
செய்கு மீரான் லெப்பை கலிபா
ஸாஹிபுல் காதிரி அவர்களால்
பார்வையிடப்பட்டு,

திருநெல்வேலி,
ஸ்ரீ மீனம்பிகை பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1934. (விலை அணு 5.

Q7:31
N34.
171792

|

இலாஹி.

## சிறப்புப்பாயிரம்.

மேலப்பாளையம் சங்கீத மகாவித்வான் ஷாஹுல்ஹமீது
புலவரவர்கள் குமாரரும் நாகூர் தர்ஹாவாயல்
வித்வான்மெய்ஞான அருள்வாக்கியப் புலவருமாகிய
**செய்குமீரான் லெப்பை கலிபாஸாஹிபுல் காதிரி**
அவர்களாலிற்றிய சாற்றுக்கவி.

### ஆசிரிய விருத்தம்.

கங்கைசூழுலகத்தி லெங்கும்புகழ்பெற்ற
காத்திமுல்லன்பியாவின்
கனதவஞ்சிறந்துலகி லுற்பவஞ்செய்திடும்
கண்மணி பாத்திமாவின்
சிங்காரநாயகி னற்புமெவைகளை
சீராகவே திரட்டி
சித்தாம்பரத்துடைய முத்தியருள்வாக்கினல்
செந்தமிழ் கும்மியாக
மங்காமற்செய்திடுந் திங்களொளிவீசிடும்
மதிமேலப் பாளயத்தில்
மாதவந்திகழும் ஷாஹுல்ஹமீதெனும்லெப்பை
மதிதவத்தாலுதித்து
எங்கும்பிரசங்கமே தங்கும்புறுகான்மறை
இசைவாகக் கற்றுணர்ந்தோன்
இனிமையருள் குடிகொண்ட முகையதீன்மஸ்தா
னென்னுமெய்யருட் கவியனே.

திருநெல்வேலி ஜில்லா வல்லை நகர்வாசியும், வேப்பத்தூர்
சங்கவித்வான் பரம்பரையைச் சேர்ந்தவரும் தற்காலம் ஹமீதியா
நகர் முஸ்லீம் பாடசாலைத் தலைமை ஆசிரியருமான

## V. G. பொன்னையரவர்கள் இயற்றிய சாற்றுக்கவி.

### ஆசிரிய விருத்தம்.

நீர்வளமும் நிலவளமும் பொருந்துமேலப்பாளையத்
தமருமாசனங்களேத்து நன்மணியாய்ச்
சீருலவும்புறுகான் மறையோதுஞ் சாகுல்ஹமீதுலப்பை
தன்றவப்பயனா லப்புவியில்
பேருலவும் பாலனாய்த் தோன்றுநற்குணசீலனும்
அருட்கவி முகைதீன்மஸ்தான்
தாருலவும் பாத்திமா நாயகியாள் புகழ்சரிதை
பைந்தமிழிற் கும்மியாய்
நேர்விளங்க நெறிமார்க்கப்படியுரைத்துச்
சீடருய்யும் வழிகாட்டியன்பாய்
கூர்மையுடனல்வேதத்தின் முழங்கப்பாரினிற்
கூறவல்லாரெவரினியே.

ஹாமீம்.

786

# பாத்திமா நாயகி
# தோத்திரமெய்ஞ்ஞான அருளானந்தக்
# கீர்த்தனைக் கும்மி.

வெண்பா.

மங்காதஜோதிமணிச் சுடர்தீபம்போல்
சிங்காரமா இலங்கும் ஆண்டவனே—தங்குமருள்
தோத்திரவாய் கும்மிதனை தாரணியில் செப்புதற்கு
நேத்திரனே நல்லருளைத்தா.

காப்பு.

பூரணப்பொருளாய்நின்ற புகழ்முஹம்மதுநந்நபியின்
காரணப்பொருளாய்வந்த கண்மணிபாத்திமாமேல்
தாரணிப்பொருளாய்க் கும்மித்தமிழையான் பாடுதற்கு
ஆரணப்பொருளாயெங்கு மாதியே காப்புநீயே

கடவுள் வாழ்த்து.

கண்ணிகள்.

ஆலமெல்லாம்படைத்தவனே—அஹதாயெங்கும்நின்றவனே
காலமெல்லாமிருப்பவனே—ஹய்யுல்கய்யூமானவனே (1)

கோலமாகநின்றவனே—குதுரத்தானஸமதானே
சீலமாய்நான்புகழ்வதற்குச்—சிறப்புத்தருவாய்ரஹ்மானே (2)

ஈமானென்னுமொழிவுநீ—இஸ்லாமெனுந்தெளிவுநீ
கோமானென்னுமருளுநீ—குத்தூஸென்னும்றாஹ்நீ (3)

தேமானென்னுங்கலிமாநீ—தவ்ஹீதென்னும்ஸிரறுநீ
சீமானென்னும்பொருளுநீ—சித்திதருவாய்ரஹ்மானே (4)

வட்டவடிவானதுநீ—வளர்திரண்டமுத்ததுநீ
பட்டப்பகல்போல்அலிபுநீ—பதிவாய்முளங்கும்நூறதுநீ (5)

வெட்டவெளிய னந்தம்நீ—வேருங்கன்ஸுதாத்ததுநீ
முட்டையானஸிபத்துநீ—முத்திதருவாய் ரஹ்மானே (6)

## யாஸீன்.

## நூல்.

பிஸ்மில்லாஹிற்றஹுமானவனின் ஒரு
பெரியவனின் றாதராகவந்த
அஸ்மாமுஹம்மது நன்மகள்பாத்திமா
அன்னையைப்போற்றடி தோழிப்பெண்ணே. (1)

தோழிப்பெண்ணேயடி தோழிப்பெண்ணே திரு
துங்கமயில்வடிவாகவந்த
காத்திமுல்அன்பியா நன்மகள்பாத்திமா
காரணங்கேளுங்கள் தோழிப்பெண்ணே. (2)

சொர்க்கப்பதியோர் புகழ்ந்தேற்றும்
துலங்கும் அமரர்மகிழ்ந்தேற்றும்
சற்குருநன்னபியா மகள் பாத்திமா
சலவாத்தையோதடி தோழிப்பெண்ணே (3)

ஆல்அஸுஹாபு அடங்கலுக்கும்
அஹ்லுல்பைத்தீன்க ளனைவருக்கும்
மேலாம்முஹம்மது நன்மணிபாத்திமா
மேன்மையைப்போற்றடி தோழிப்பெண்ணே (4)

ஆதம்நபியைப் படைக்கமுன்னே
அண்ணல்முஹம்மதை முத்தருவாய்
வேதச்சுடரொளி நபிமகள்பாத்திமா
விந்தையைப்போற்றடி தோழிப்பெண்ணே. (5)

முந்தையெகின் மாமீதிருந்தே
முத்தாய்த்திரண்டுருவாகவந்தே
விந்தைமுஹம்மது வின்மகள்பாத்திமா
விருப்பத்தைப்போற்றடி தோழிப்பெண்ணே (6)

முன்னோன்மஹ்மூது கண்ணாடியை
முன்னாலேவைத்தான் முகம்பார்க்க
தன்னாலேமெய்ரூப ஆனந்தம்கண்டிடும்
தாஹாவைப்போற்றடி தோழிப்பெண்ணே (7)

தங்கநிறமாந் தலையதுவாம் ரத்ன
குங்குமத்தாலே சொண்டதுவாம்
எங்கும்பறந்தோடி வந்திடும்தாவூஸை
ஏற்றித்துதித்துக்கொள் தோழிப்பெண்ணே (8)

சாவலாந்தைகாகம் வில்வத்தான்
சாதிக்கும்பறவைகள் மயிலோடும்
காவலாயோடிக் கருத்தைந்துமொன்றான
ஹளூறத்தைப்போற்றடி தோழிப்பெண்ணே (9)

அஞ்சுநிறமாக ஆடிடுமாம் மயில்
ஆண்டவன்பக்க லடைந்திடுமாம்
அஞ்சுஸஜதாவும் சைய்தநபிமகள்
அரசியைப்போற்றடி தோழிப்பெண்ணே (10)

மூமீன்களின்ஸா ணலத்திலே
மண்ணுனுரைத்தான் மண்ணள்ளும்படி
பூமியில்ஜிபுறீல் பிடிமண்ணள்ளிடும்
புதுமையைப்பாரடி தோழிப்பெண்ணே (11)

வந்தார்ஜிபுறீல் மதீனாவுக்கு
வரிசைமுகம்மது கபூரிடத்தில்
சந்தனஞ்சவ்வா துற்றமண்ணள்ளிடும்
சபபதைக்கேளடி தோழிப்பெண்ணே (12)

அரஸூகுருஸூ லவ்ஹூகலம்
வானம்பூமிசொர்க்கத் தருவிகளில்
வரிசையுடன்முக்கி யாதியிடம்சேர்த்த
வன்மையைப்பாரடி தோழிப்பெண்ணே (13)

மண்ணினில்வேர்வை யொலித்தோட
மன்னர்நபிமா ரெல்லாம்படைத்தான்
கண்ணினிலுற்ற முஹம்மதுமகளாரை
கனிந்துபோற்றடி தோழிப்பெண்ணே (14)

ஆலத்தாருக்கு ஹலீபத்தாய்வந்த
ஆதமுடைய குகைதனிலே
சீலமுகம்மது ஒளிவிலுதித்த
சித்தியைப்போற்றடி தோழிப்பெண்ணே (15)

நூறுக்குள் நூறாத நூறாகி
நூனுக்குள் நூகத்துயிராகி
நூருமுஹம்மது நன்மகள்பாத்திமா
நூரதைப்போற்றடி தோழிப்பெண்ணே (16)

அரபாமலையினி லொன்றாக
ஆதம்ஹவ்வாவைச் சேரும்படி
சிறப்பானசொர்க்கத் தருவினைத்திருப்பிட
சொகுஸாய்க்குளித்தாரே தோழிப்பெண்ணே (17)

உண்மையானமீம் தலையாகி
உவந்தஹேயான விருகையாகி
நன்மைநடுமீம் தொப்புள்தால்காலான
நவநீதம்பாரடி தோழிப்பெண்ணே (18)

ஆதம்நபிமுத லாகவந்த
அன்பத்தோர் தலைமுறையிற் சிறந்த
வேதமுஹம்மதருள்மகள் பாத்திமா
தோத்திரம்சொல்லடி தோழிப்பெண்ணே (19)

ஆதநபியின் முதுகுவளி
ஆதியமைத்தானுபுவத்தொளி
சோதியுறும் பாத்திமுத்துஸுஹுறாவை
துதித்துப்போற்றடி தோழிப்பெண்ணே (20)

அப்துல்முத்தலிபின் புத்திரராம்
அப்துல்லாவின் றிருப்பாலகராம்
முப்புவனம்புகழு நன்மகள்பாத்திமா
முத்தியைப்போற்றடி தோழிப்பெண்ணே (21)

ஆமினாவின்செல்வப் பாலகராம்
அற்புதமுற்றதி வாகரராம்
மூமீன்கள்போற்று முஹம்மதுமகளாரை
மௌனமாய்போற்றடி தோழிப்பெண்ணே (22)

விருப்பமாயாதி யருஷுதன்னில்
வித்தானமுத்தேயா அஹமதென்றும்
செருப்பைக்கழற்றாமல் வாருமென்றநபி
ஸிற்றதைப்போற்றடி தோழிப்பெண்ணே (23)

அருஷுக்குமேலால் ஆண்டவனும்
ஆதிசமூகம் சென்றவராம்
குரிசில்முஹம்மது நன்மகளாரை
கூடியேபோற்றடி தோழிப்பெண்ணே (24)

காப கவ்சைனி அவ் அதுனு
ஹக்காய்க்கடந்து தெரிசித்தோரும்
தீபமனேன்மணியாய்வந்த பாத்திமா
தேவியைப்போற்றடி தோழிப்பெண்ணே (25)

றப்பனுடைய சமூகத்திலே
றப்பனு அத்தஹிய்யாத்தோத
செப்பும்வணக்க முஹம்மதுமகளாரை
சேர்ந்துபோற்றடி தோழிப்பெண்ணே (26)

ஐந்தொகுத்தான தொழுகைநிலை
ஆனந்தத்துட னுரைத்துவந்த
சுந்தரநன்னபி நற்றவப்பாத்திமா
தோகையைப்போற்றடி தோழிப்பெண்ணே (27)

அமரர்களுஞ் சலவாத்தோத
அவ்வழியை மூமீன்களுக்கு
சமமாயுரைத்திடும் நன்னபிமகளாரை
சார்ந்துபோற்றடி தோழிப்பெண்ணே (28)

நலமானலாயிலாஹ இல்லல்லா
நாடுங்கலிமாவின் திக்குறதை
பெலமாகச்சொன்ன முஹம்மதுபுத்திரி
பீவியைப்போற்றடி தோழிப்பெண்ணே (29)

அலஸ்துபிரப்பிகு மென்றுரைத்த
ஆதிமொழியைத் தானுணர்ந்து
தலைவனைத்தெரிந்து தானான
தாயைப்போற்றடி தோழிப்பெண்ணே (30)

நாஸூத்துமக்காம் தான்கடந்து
நன்மைஜபரூபத்தையுந் தொடர்ந்து
மாசிலாரூப வசிகரபாத்திமா
மாதரைப்போற்றடி தோழிப்பெண்ணே (31)

ஜபரூத்துவழியை யடுத்து
சார்ந்தலாஹூத்தையுந் தொடுத்து
அபூர்வஸூரத்தையுங் கடந்த
அண்ணலைப்போற்றடி தோழிப்பெண்ணே (32)

ஹாஹூத்து பாஹூத்தின் வழியை
அன்பான ஜம்ஹூத்தினொளிவை
யாஹூவில்இன்ஸான் காமிலான
யேந்தலைப்போற்றடி தோழிப்பெண்ணே (33)

ஆலத்திலின்ஸான் கோலத்திலே
அண்ணல்ஜிபுரீலையுந் தெரிந்த
வாலைப்பிரகாசமாம் பாத்திமாநாதரை
வாழ்த்திப்போற்றடி தோழிப்பெண்ணே (34)

மாதுசிரோன்மணி யானவராம்
மட்டிலடங்கா வாழ்வோராம்
பூதலநன்னபியாமகள் பாத்திமா
பூவையைப்போற்றடி தோழிப்பெண்ணே (35)

மக்கநகரில் பிறந்தவராம்
மாமதினாவி லமைந்தவராம்
ஹக்கன்ஹஸரத்தைக் கண்டிடும்பாத்திமா
கனியைப்போற்றடி தோழிப்பெண்ணே (36)

சொர்க்கத்துரம்பையர் போற்றுவாராம்
ஸூந்துஸூபட்டை யுடுத்தவராம்
நற்புகழ்மெய்ஞ்ஞான பாத்திமாநாதரை
நாவினால்போற்றடி தோழிப்பெண்ணே (37)

மௌனமணிச்சுட ரானவராம்
மங்காததிங்கள் வடிவோராம்
தவசிரேஷ்டர் முஹம்மதர் பாத்திமா
தாய்தன்னைப்போற்றடி தோழிப்பெண்ணே (38)

இன்னாஅறள்நல் அமானத்
இறையவன்வேதத்தில் தானுரைத்தான்
சொன்னமொழியைத் தெரிந்திடும் பாத்திமா
சூட்சத்தைப்பாரடி தோழிப்பெண்ணே (39)

தௌறாத்துஸபூர் வேதத்திலும்
தாட்டிகஇஞ்ஜீல் புறுகானிலும்
சவ்முடன்கற்றுணர் பாத்திமாவைத்தினம்
சங்கையாய்ப்போற்றடி தோழிப்பெண்ணே (40)

ஹிஜாத்துமூன்றும் வருடமதில்
ஏந்தல்நபிக்கு வஹியைக்கொண்டும்
வசிகாரான அலிக்கு மணஞ்செய்ய
வல்லோனுரைத்தானே தோழிப்பெண்ணே (41)

அலியுல்லாநபியின் ஸமூகம்வந்தே
அன்பாய்நிலையில் ஸலாமுறைத்து
வலிமையுறுமாமணக்கோலம் பேசிடும்
மாதரைப்போற்றடி தோழிப்பெண்ணே (42)

மருகே ஜரன அலிதமக்கு
மங்களமாய்ச் சோபனம் கூறி
திருக்கலியாணம் முடித்திடும் பாத்திமா
செல்வியைப் போற்றடி தோழிப்பெண்ணே (43)

அஸ்ஸஹாபி மார்களனைவருக்கும்
அன்பான கொதுபா பிரசங்கத்தை
தஸ்லீமுடன் செய்த நன்னபி மகளாரை
தாழ்ந்து போற்றடி தோழிப்பெண்ணே (44)

நால்யார்களோடு ஸஹபாக்கள்
நலமான அஹ்லுல் பைத்தீன்களும்
தாலத்தில் கலியாண முடித்திடும் பாத்திமா
தாயைத் துதித்துக்கொள் தோழிப்பெண்ணே (45)

மஹரை வேண்டா மென்றிறை யிடத்தில்
மஹ்ஜரில் பெண்கள் கரைசேர
அகமகிழாகவரம் பெற்ற பாத்திமா
அன்னலைப் போற்றடி தோழிப்பெண்ணே (46)

எங்கும் புகழ்பெற்ற நாயகியாம்
ஏந்தலர் போற்றிடுந் தாயகியாம்
மங்கைக் கரசியாய் வந்திடும் பாத்திமா
மயிலதைப் போற்றடி தோழிப்பெண்ணே (47)

பூரண மாமதிலையை அழைத்த
புவியினில் தீன்பயிரை விளைத்த
காரணரான முஹம்மது மகளாரை
கனிந்து போற்றடி தோழிப்பெண்ணே (48)

திக்குத் திகாந்தமும் போற்றும்
செல்வப் புகழ்தினத் தோங்கும்
மக்கநகர் ஹதிஜாவின் மகளாரை
வணங்கிப் போற்றடி தோழிப்பெண்ணே (49)

ஆதி யருளா லிவ்வுலகில்
அருஷாப் புலியலிபுல்லாவின்
நீதி மனைவியாய் வந்துதித்த
நீதத்தைப் பாரடி தோழிப்பெண்ணே (50)

வானுலகத்தில் அஹாமதென்னும்
வாகான சொர்க்கத்தில் மஹ்மூதென்னும்
நானிலத்து முஹம்மது மகளாரை
நாடித்துதிக்குவிர் தோழிப்பெண்ணே (51)

மக்கமதீனத்தோர் சோபனங்கூறிட
மாதவத்தோர்கள் புகழ்ந்து கொண்டாடிட
ஹக்கன் திருவருளுற்றிடும் பாத்திமா
காமிலைப் போற்றடி தோழிப்பெண்ணே (52)

பிருதவுஸூ ஸூந்து ஸூபட்டை யுடுத்திடும்
பேரருளுற்ற தவத்தோராம்
கருணையருள் குடி கொண்டிடும் பாத்திமா
கன்னியைப் போற்றடி தோழிப்பெண்ணே (53)

சொர்க்க லோகத்திலுற்றிடு முத்தினால்
தோன்று மெழுபது மாளிகைக்குள்
நற்குணத் தோடுறவாகிடும் பாத்திமா
நங்கையைப் போற்றடி தோழிப்பெண்ணே (54)

பச்சை மரகதக்கால் நாட்டி
பாங்காயோருத்திரம் தான் பூட்டி
பச்சு மாளிகை தனிலிருக்கும்
மங்கையைப் பாரடி தோழிப்பெண்ணே (55)

வரிசை பொருந்திய அலியுல்லா வீட்டிற்கு
மாதரும் முஸல்மாவுடனே
பிரியமுடன் சென்றுரைந்திடும் பாத்திமா
பீவியைப் பாரடி தோழிப்பெண்ணே (56)

உருக்குச் சட்டையை அடகு வைத்து
ஒருசேர் கோதம்பு ஓராடறுத்து
விருந்துகள் செய்திடும் அலியார் மனைவியை
விருப்பியே போற்றடி தோழிப்பெண்ணே (57)

அன்று தினம் வீடு கூடையிலே
அலியாருடன் பூமி பேசக்கண்டு
சென்று நபியிடம் சொல்லிடும் பாத்திமா
சிறப்பதைப் பாரடி தோழிப்பெண்ணே (58)

உமது மக்கள் குல கோத்திரமே
உலக முடியுநாள் வரையிலுமே
அமலுள்ள மக்களுக் கன்னையாம் பாத்திமா
அரசியைப் போற்றடி தோழிப்பெண்ணே (59)

வாசலில் வந்திடும் யாசகர்க்கு
வாகான நற்பொருளைக் கொடுத்த
மாசிலா மௌனமணிச் சுடர் பாத்திமா
மாதாவைப் போற்றடி தோழிப்பெண்ணே (60)

கன்ஸுல் மஹ்பியாவுன் பொருளாம்
ஹஸானத்து வாசல் வழி திறந்தே
தன்ஸீஹு தஸ்பீஹை யுற்றிடும் பாத்திமா
தௌலத்தைப் பாரடி தோழிப்பெண்ணே (61)

ஐந்தொகுத்தை யறிந்து தொழுதிட
அருந்து முஜீ பனந்தன்னிற் குறைத்திட
சிந்தையில் ஞான முற்றிடும் பாத்திமா
செல்வத்தைப் போற்றடி தோழிப்பெண்ணே (62)

ஆதி கலிமா வறிந்தவராம்
அய்யாறு நோன்பு பிடித்தவராம்
வேதப் பருமை முடித்திடும் பாத்திமா
வன்மையைப் போற்றடி தோழிப்பெண்ணே (63)

வேதாந்த ஞான விளக்கொளிவாம்
வேந்தர் நபி சொற்றுயர்ந்தவராம்
போதாந்த மெய்ப்புருகானை யுவந்திடும்
பூவையை போற்றடி தோழிப்பெண்ணே (64)

குர்ஆன் முப்பது மோதிவந்து
குன்னென்ற சொல்மொழியை யுணர்ந்து
சர்வ தயாள குணமுற்ற பாத்திமா
சங்கையைப் போற்றடி தோழிப்பெண்ணே (65)

ஒட்டக முடியாலுடைப் புடுத்து
உடையோன் வணக்கந்தனை யடுத்து
கட்டழகுடைய பாத்திமா பீவியின்
கருணையைப்பாரடி தோழிப்பெண்ணே (66

துன்பத்தை யின்பமாய்க் கொண்டவராம்
தூண்டா மணிவிளக் கானவராம்
பொன்னுலகத்தோர் புகழ்ந்திடும் பாத்திமா
பூரணம் பாரடி தோழிப்பெண்ணே (67)

ஹிஜாத்து மூன்றும் வருடத்திலே
இமாம்ஹஸனுரைப் பெற்றெடுத்து
துசிகரநா ளேழில் ஹத்னுவும் செய்திடும்
தோகையைப் பாரடி தோழிப்பெண்ணே (68)

அகீகா வெனுமிரு வாடறுத்து
அழகாய்க் கொடுத்துமே முடியிரக்கி
மகிமை சதகாக் கொடுத்திடும் பாத்திமா
வரிசையைப் பாரடி தோழிப்பெண்ணே (69)

தையிபு தாஹீர் இப்றுஹீம்
சார்ந்திடும் ஹாஸீம் உம்முகுல் தூம்
மெய்ப்பொருள் செய்னபு றுகய்யா பாத்திமா
மேன்மையப்பாரடி தோழிப்பெண்ணே (70)

வல்லோன் குர்ஆன் யெழுத்தெழுத
வள்ளல் ஹஸனுஸன் கேட்குவண்ணம்
உல்லாஸ மாங்கனி கொடுத்திடும் பாத்திமா
உறுதியைப் பாரடி தோழிப்பெண்ணே. (71)

ஆதி நபியுல்லா தம்மிடத்தில்
அலியுல்லா ரகசியந்தான் கேட்க
சோதி பாத்திமா நாதரிடம் கேட்க
சொன்னதைப் பாரடி தோழிப்பெண்ணே (72)

அலியார் பாத்திமா வாதாடி
அஹுமது நபியிடம் வந்துரைத்தார்
மலிபுகழ் பாத்திமா நாதருகப்பென்று
மஹ்முதுரைத்தாரே தோழிப்பெண்ணே (73)

அன்புள்ள பாத்திமா பிரியமென்றும்
அலிமருசேஜ ரேசங்கையென்றும்
நன்மொழி யுரைத்திடும் நபிமகள் பாத்திமா
நற்றவம் பாரடி தோழிப்பெண்ணே (74)

வாசம் பொருந்து நபிமகளாரே
வாசலில் வந்த மிஸ்கீன் களுக்கு
நேசவுஜீ. பனங்கொடுத்திடும் பாத்திமா
நீதத்தைப் பாரடி தோழிப்பெண்ணே (75)

வறுமை மிகுதியா யுற்றிருந்தாலும்
வந்த ஜனங்களுக்குத் தருமஞ் செய்தால்
அருமைப் பதியடையச்சொன்ன பாத்திமா
அற்புதம் பாரடி தோழிப்பெண்ணே (76)

முன் வந்த ரொட்டியை மிஸ்கீன்களுக்கு
முழுதுங் கொடுக்க ஹஸனுஸைனும்
பின்னால் பசியாயிருந்திடும் பாத்திமா
பேரின்பம் பாரடி தோழிப்பெண்ணே. (77)

நாடி நிற்கு மஹுஷர் வேளையில்
நாயனிடம் மன்றாடு வாராம்
கேட்டே மாதர் பாவந்தீர்த்திடும் பாத்திமா
காட்சியைப்பாரடி தோழிப்பெண்ணே, (78)

மரஜல்பஹ்ரைனி யாகவந்த
மங்கையர் தங்கள் மனங்குளிர்ந்த
அரபா அமினா தரித்திடும் பாத்திமா
அன்னையைப்பாரடி தோழிப்பெண்ணே (79)

மவுத்துக்கு முன்னால் குளித்திடவே
மவுத்துக்குப்பின் குளிப்பாட்டாமல்
தவுலத்தருள் ஞானம் பெற்றிடும் பாத்திமா
தமையதைப்பாரடி தோழிப்பெண்ணே (80)

மனிதர்கள்காணு தென்பயத்தை
மௌனமாயிரவி லெடுக்கவேணும்
தனிமை அலிக்கு நவிஹத்துப்பாத்திமா
தௌலத்தைப்பாரடி தோழிப்பெண்ணே (81)

அன்னியர்காணும லலிபுலியும்
அருமை ஹஸனுஸை னிருவர்களும்
முன்னிரவில் மய்யத்தை யடக்கிடும்
முத்தியைப்பாரடி தோழிப்பெண்ணே (82)

மேகக்குடை நிழல் பெற்றவராம்
மேலான நன்னபி கால்மாட்டில்
மோகத்துடனமைந்திடும் பாத்திமா
மோட்சத்தைப் பாரடி தோழிப்பெண்ணே (83)

முத்திலுதித்திடும் முஸ்தபா நன்னபி
முறையான வேதப்படி யுரைத்தேன்
பத்தியாய் பாத்திமா-கும்மியைப் படிப்போர்க்குப்
பாக்கியமாமடி தோழிப்பெண்ணே (84)

அல்லாப்பசலு மிதைப் படிப்போர்க்கு
ஆதி நபியின்ஷபா அத்துப்
நல்லுதவி செய்யும நாச்சியார் பாத்திமா
நன்மையைப் பாரடி தோழிப்பெண்ணே (85)

சக்கராத்து ஹாலினில் சங்கன்றியே
ஷஹாதத்து கலிமாவை நினைப்புடனே
தக்ருரில்லாமலே தர்காக்கும் பாத்திமா
தயவு செய்வாரடி தோழிப்பெண்ணே (86)

ஈசனிலுதித்திடும் நாயகி மதுஹை
நாளும் புகழ்ந்திட வெல்லோரும்
புவியினில் தீன்டயிர் வாழ்கவே பாத்திமா
புண்ணியம் பாரடி தோழிப்பெண்ணே (87)

பீஸானில் நன்மை கூடுதலாக
பெய் முஸ்தகின் பாலப்மேல் கடக்க
பாச ஷபா அத்து செய்திடும் பாத்திமா
பவுஷதைப்பாரடி தோழிப்பெண்ணே (88)

அச்சமாய் நிற்கு மஹ்ஷர் தன்னில்
ஆண்டவன் கட்டளை கண்கள் மூட
பச்சைப் போர்வையுடன் சொர்க்கத்து பாத்திமா
பதிசேருவாரடி தோழிப்பெண்ணே (89)

எந்தன் தாய் தந்தை மனைவி மக்களுக்கும்
இன்பமாய்க் கேட்டு நடந்தோர்க்கும்
சந்திர னொளிவுற்ற ஸஹ்ரூபி பாத்திமா
ஷபா அத்தாமடி தோழிப்பெண்ணே (90)

குல்லு முஸ்லி மனைவோர்க்கும்
கூடுஞ்சபை யோரடங்கலுக்கும்
வல்லோனின் பாத்திமா பீவி ஷபாஅத்து
வாழ்வு கிடைத்திடுந் தோழிப்பெண்ணே (91)

புகழோங்கு மேலப்பாளையத்தில்
புதுமனை நடுத்தெருவிலிருக்கும்
அகமகிழ் முகைதீன் மஸ்தான் கவிதை
அன்புடன் கேளுங்கள் தோழிப்பெண்ணே (92)

ஆதிநபியிரசூல் வாழ்க
ஆல் அஸ்ஹாபிகளும் வாழ்க
சோதி பாத்திமுத்து ஸுஹ்ரூவும் வாழ்க
சோபனம் சொல்லடி தோழிப்பெண்ணே (93)

ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!!

"தாஸீன்மீம்"

வெண்பா.

முத்தினிலுதித்த முஹம்மது நல் புத்திரியாய்
பத்தினிமானென்னும் பதிபோன்ற—சித்தியின்மேல்
பொங்கிடுமுனஜாத்தை புவிதனில் செப்புதற்கு
எங்குமிருப்பவனே துணை.

# முனஜாத்து.

மாபணியே யாமணியே எங்கள் மனோன்மணியே
மாமணியே பூமணியே பாத்தி முத்துக்கண்மணியே (1)

அவ்வலாய் நின்ற முத்து ஆஹிராய் வந்தமுத்து
மவ்வலாய்க் காய்த்தமுத்து ஆணிமுத்து பாத்திமுத்தே (2)

அஹதாய் நிறைந்தமுத்து வாஹிதாய் வந்தமுத்து
உஹதாய் சிறந்தமுத்து உண்மையே பாத்திமுத்தே (3)

தாத்தொளிவாய் வந்தமுத்து தரிக்கும் சிபத்தானமுத்து
தோத்திரமாய் வந்தமுத்து தோகையரே பாத்திமுத்தே (4)

மூச்சிலுறவான முத்து மூச்சுடராய் நின்ற முத்து
மெய்ச்சுடராய் வந்தமுத்து மேரேஸித்தி பாத்திமுத்தே (5)

விண்ணிளொளிவான முத்து வேந்தனமைத்த முத்து
கண்ணிளொளிவான முத்து கஸ்புக்கனி பாத்திமுத்தே (6)

ஆதியொளிவான முத்து ஆலைபி பெற்றமுத்து
சோதியொளிவான முத்து சுடரொளிவே பாத்திமுத்தே (7)

வேதவொளிவான முத்து வேதாந்த ஞானமுத்து
நீதிவழியான முத்து நிரப்பமுள்ள பாத்திமுத்தே (௮)

மாதர்களுக்கான முத்து மஹஷரில் கைதாங்கு முத்து
காதலாய் வந்த முத்து கானொளிவே பாத்திமுத்தே (9)

வானோர் துதிக்குமுத்து வள்ளலாய் வந்த முத்து
தீனோர் புகழுமுத்து தேவியரே பாத்திமுத்தே (10)

மூலப்பதியான முத்து முப்பொருளாய் நின்றமுத்து
வாலைப்பதி ரத்னமுத்து வாழ்வாசி பாத்திமுத்தே (11)

உதிப்பாயுகந்த முத்து உலகமெலாம் போற்று முத்து
மதிப்பிலடங்காத முத்து மாதரசி பாத்திமுத்தே (12)

ஹதீஜாபீவி யீன்ற முத்து ஹஸனுஸைனைப் பெற்றமுத்து
குதுவுமார் தேடுமுத்து கோனகுலே பாத்திமுத்தே (13)

ஒலிமார் துதிக்கு முத்து வுஜீதிற்றெளிவான முத்து
அலியார்க்கிசைந்த முத்து அழகுபீவி பாத்திமுத்தே (14)

முன்னில் மூளங்கு முத்து மௌஜூதாய் நின்ற முத்து
என்னிற்றுலங்கு முத்து யெங்கள்பீவி பாத்திமுத்தே (15)

குறைசி குலமானமுத்து கோமனருள் கொண்ட முத்து
அரசர் புகழான முத்து ஆரணரே பாத்திமுத்தே (16)

மக்கப்பதியான முத்து மௌமணி தீபமுத்து
ஹக்கனுகந்த முத்து காரணரே பாத்திமுத்தே (17)

ககனோர் புகழு முத்து கஷ்டதுன்பந்தீர்க்கு முத்து
ஜெகத்தோர் நவிலுமுத்து செய்யிதே பாத்திமுத்தே (18)

பெரியோர் மகிழுமுத்து பேரின்பருன முத்து
அறிவோர்க் கருவான முத்து அண்ணலே பாத்திமுத்தே (19)

நேமமான மணியே நினைவரிவான மணியே
க்ஷேமந்தருமணியே சிரோன்மணி பாத்திமுத்தே (20)

மாசில்லாத் தவமணியே மறையோது மாமணியே
யாஸீன் நபிகனியே யாஜத்தி பாத்திமுத்தே (21)

கத்தன் கலிமாவைப் பத்தியா யென்கல்பில்
சித்திபெற வெந்தஸீக்கு முத்திதரும் பாத்திமுத்தே (22)

நாளை மஹூஷரிலே மூளையுருகாமலென்னை
வேளையிலுதவி செய்யும் விருப்பமுள்ள பாத்திமுத்தே (23)

தவனமாய் நிற்கும் வேளை தருவீர்ஷபா அத்தினை
மௌனமாய்ப் பதிசேர மன்றூடும் பாத்திமுத்தே (24)

தாஸன் முகைதீன் மஸ்தான் தமியேன்றனக்குதுவா
பாசமாய் பிருதவ்ஸை பதிவுசெய்வீர் பாத்திமுத்தே. (25)

ஆமீன்! யாரப்பில் ஆலமீன்!!

# பதங்கள்.

இராகம் இந்துஸ்தான். தாளம் ஏகம்.

பல்லவி

பாத்திமுத்து ஸுஹறுறு பதூலே
ஸுஹறுறு பதூலே ஜோஜான் ஜன்ணப்திலே.

சரணம்

1. மதியை யழைத்தோர் முஹம்மதின் பூவே
கதிரொளிக கனத்தோர் மெழுங்கோவே (பாத்தி)

2. அஞ்சுவகுத்தை யறிந்தொழுது
கொஞ்சும் வாசிதனிலே ஹுவென்றோதும் (பாத்தி)

3. பஞ்சுபோல் கோதுமை பதமாயறைத்து
அஞ்சிடும் பஞ்சபூத மாண்டிடவே (பாத்தி)

4. ஆங்கார வட்டமோங் காரச்சுளியிலே
பாங்காய்த் தெரிசித்த நல்பத்தினியே (பாத்தி)

5. அய்பான பெண்கள் அய்யமே பொறுக்க
கொய்பில் மதற்குக் கோமன் ஷபா அத்தீந்தான் (பாத்தி)

6. ஹாத்தி முல் அன்பியா ஹாஸீம் குலமேட்ர
தோத்திர ராயுதித்த தோகையரே (பாத்தி)

7. வஹியால் ஜிபுரீலுரைற்தார் நபிக்கு
மஹிமை அலிக்கு மணஞ்செய்யு மென்ற (பாத்தி)

8. பத்தியாய் குதுபாபய காம்பரோதி
கத்தனனுப்புந்தாலி கட்டினதேரும் (பாத்தி)

9. எங்கும் புகழோர் சங்கந்துதிக்க
தங்கும் ஷஹாபாக்களுஞ் சோபனிக்க (பாத்தி)

10. ஹைளு நிபாஷற்ற கருனகிசுஹறு
பைளென்னு முஹுஜிஸாத்தில் பரிபூரண (பாத்தி)

11. அச்சமுடனே யரசர் கண்மூட
பச்சைப் போர்வையுடனே பதிசேருவோர் (பாத்தி)

12. நாளைமஹுஷர் மாதர்க்கரசாயவ்
வேளை மன்றுடுஞ்சித்தி மனோன்மணியே (பாத்தி)

13. பாலன் முஹைறதீன் மஸ்தானின் றுன்பம்
தாலத்திற் பறந்திடப் பதந்தருவீர். (பாத்தி)

## இராகம்—இங்கிலீஷ் நோட்டு மெட்டு.

### பல்லவி.

அரசே வாருமே ஆனந்தம் தாருமே

### அநுபல்லவி.

அண்ணலே அப்துல் கரீமே முன்னிலே முகம்பாருமே

### சரணம்.

1. அஞ்சு பூதமாம் ஐம்புலப் போதமாம்
கொஞ்சும் ஹளுறததில் குடிகொண்டகுணமாம் (அரசே)

2. அஞ்செழுத்தில் பிஞ்செழுத்தை
ஆட்டிடுந் திருநாதரே (அரசே)

3. பாரும் சரிஹத்து பயகாம்பர் வேதமாம்
தேரும் தரிகத்து நபியின் செயலதாம் (அரசே)

4. ஹாலுமாம் ஹகீகத்தினில்
சாரும் மஹுரிபா சிற்றதாம் (அரசே)

5. காரு மைந்தனே ஸுஹூதில் காட்டுமெந்தனே
தேரும் வுஜீதிற்றெளிவுகாணுமௌஜூதாம் (அரசே)

6. வாசிலே மன்னப்சிலே
பாசிக்க கற்றும் நேசரே (அரசே)

7. அண்டர் தேவராம் புவியிலரசர் நேசராம்
கண்டவதிசயமிவரெண்டிசையோராம் (அரசே)

8. மண்டலமெல்லாம் புகழும்
மன்னரே முன்னிற்கவே (அரசே)

9. சித்திரப்போத ஸிகாமணி ஸீதா
சத்திய வேதா சாயுஜ்யமேதாதா (அரசே)

10. சரியை கிரியை யோக ஞானம்
சார்ந்தவர்க்கருள் தந்திட . (அரசே)

11. நாட்டமுளோர்க்கு இவர் கேட்டது கொடுப்பார் மன
வாட்டமுளோர்க்கு நல்வாக்குமே யுரைப்பார் (அரசே)

12. தேட்ட முள்ள ராஜ ராஜ
தேவர் கோடி கோடியே (அரசே)

13. எங்கும் பிரபல திவ்ய சங்கிர்தக்குவாரும்
தங்குமீய கான்பள்ளிபிற்றித்திடுதிவாரும்
பொங்கும் புகழ்சங்கை ஸலாம்
போற்று முகைதீன் மஸ்தானும். (அரசே)

## இராகம்—இந்துஸ்தான்.

பல்லவி.

ஆஷிகுபானி அப்துல்கறீமதனி ஆஷிகுபானி

அநுபல்லவி.

தேசாபிமானி நேசர்க்குரைஸானி
மஹ¬ஷ¬குயானி ஷாஹ¬இன்சானி (ஆஷி)

சரணம்.

1. மங்கை மனுமில்கண்டு தங்கள் கதம்பணிந்து
சங்கைஸலாமுரைத்து சார்ந்தோர்க்கருள்புரிந்து
அருள்தாரு மெனைக்காரும்
முகம்பாரும் துயர்தீரும் (ஆஷி)

2. ககக்கிருபாகரா காகருணாகரா
புகழ்மிக்கசௌந்தரா புண்யவுல்லாதரா
அருள்தாரு மெனைக்காரும்
முகம்பாரும் துயர்தீரும் (ஆஷி)

3. தேசாதி தேசர்கூடி தினம்வருவார் கோடாகோடி
ராசாதிராஜர்நாடி ரஹஸியமனம்வாடி
அருள்தாரு மெனைக்காரும்
முகம்பாருந் துயர்தீரும் (ஆஷி)

4. மக்கமதீனத்தோரே பாமணிச்சுடரே
ஹக்கனருள்பெற்ற பீரேஹாஸீங் குலமேரே
அருள்தாரு மெனைக்காரும்
முகம்பாரும் துயர்தீரும் (ஆஷி)

5. தாஸன்முகைதீன் மஸ்தான் றனக்குபகாரா
தேசமெல்லாம்புகழும் தீரசிங்காரா
அருள்தாரு மெனைக்காரும்
முகம்பாரும் துயர்தீரும். (ஆஷி)

## இராகம்—இந்துஸ்தான்.

அமாரநபி என்ற பாடல் மெட்டு.

பல்லவி.

பாத்திமுத்தே ஹஜி மேரேபிர்தவ்ஸே
மேறே பிர்தவ்ஸே மேறே பிர்தவ்ஸே (பாத்தி)

சரணம்.

1. தாத்திஞெளிவே தரிக்கும் சிபத்தே
தோத்திரக்கோவே தோகையரே ஹாஜி (பாத்தி)

2. மூலப்பதியேமுச் சுடரொளிவே
முப்பொருளாகல் மெய்ப்பொருளே ஹாஜி (பாத்தி)

3. விண்ணிஞெளிவே வேதச்சுடரே
கண்ணிஞெளிவே காரணமே ஹாஜி (பாத்தி)

4. லேரேவுஜூதே லெளியவேமவ்ஜூதே
சேரும்ஸுஹூதே செய்யதிஞ ஹாஜி (பாத்தி)

5. சுன்னத்திதாரே பீரேஹமாரே
சன்னத்துல்ஸாரே ஸந்ததியே ஹாஜி (பாத்தி)

6. நேத்திரவித்தே கோத்திரஸித்தே
போற்றிடுமுத்தே பொற்பதியே ஹாஜி (பாத்தி)

7. பத்தினிமானே முத்திபெறுங்கோனே
சித்திமுகைதீன் மஸ்தானுக்கேயருள் மேயருள் ஹாஜி
(பாத்தி)

---

## இராகம்—நொண்டிச்சிந்துமெட்டு.

1 வந்தனம் வந்தனமே—வாசம்
வீசிடும் மஜ்லீஸிலனைவருக்குமே
சந்தனம் சந்தனமே—இந்த
சபைதனிலிம்மதுஹுவை சார்ந்தவர்க்குமே (வந்த)

2. மாமதி தனையழைத்தோர் —காட்டில்
மானுக்குப்பிணைநின்று கட்டவிழ்த்தோர்
வான்மதி அருஷில்சென்றோர்—வாழும்
வள்ளல் முகம்மதர்க்கும் வந்தனமே (வந்த)

3. தேசாதி ருஜர் துதிப்பார்—இந்த
தேசத்திலுள்ளவர்கள் தான் துதிப்பார்
சேனுதி சேனே மகிழ்வார்—செய்யித்
தபூபக்கர்ஸித்தீக் அவர்க்கும் வந்தனமே (வந்த)

4: அருள் ஞானமமைந்தோராம்—புவியில்
உருளுமபுஜஹில்லை யுதைத்தவராம்
பொருளினிலுறுதியோராம்—புண்யம்
உமர்கத்தாப்அவர்க்கும் வந்தனமே (வந்த)

5 வேதம் நிறைந்தபூமான்—மறை
வேதத்தை யொன்ருயமைத்த கோமான்
ஆதம்வழியிலுது—மானிபுனி
அப்பானவர்களுக்கும் வந்தனமே (வந்த)

6. நல்அரசுக்கு அங்கமாம்—அண்ணல்
அஹமதுமாதுலரான தங்கமாம்
துல்துல் நடத்துஞ் சிங்கமாம்—துய்யோர்
அலியார்பாத்திமாவுக்கும் வந்தனமே (வந்த)

7. முல்லையிருவாக்ஷி சூழும்—சந்தம்
முழங்கிடும்பகதாத் அரசாளும்
மல்லிகை மலர்வாசம்—கமளும்
முஹியித்தீன் ஆண்டகைக்கும் வந்தனமும் வந்தனமே (வந்)

8. சங்கம் சிறந்தவராம்—சுந்தரம்
சாகுல்ஹமீதுலெப்பை மைந்தனுமாம்
பொங்குமேலப் பாளயமாம்—ஒலிமாற்
பாதமென்சிரசின்மேற் றினந்தினமாம் (வந்த)

9. தாஸன் முகைதீனும்—மஸ்தான்
நேஸனுக்கருள் தரும் நல்லொலியாம்
தேசத்து தேவர்யாவர்க்கும்—மிங்கு
தங்கும் சபையோர்க்கும் வந்தனமே (வந்த)

## இராகம்—ரூபகம்.

### கண்ணிகள்.

1. வருதிருப்பது தாமிதமோ—இங்கு
வருவீர்அப்துல்கரீம் நாயகமே
பார்தனில் வாதி பறந்திடவே—முகம்
பாரும் அப்துல்கரீம் நாயகமே (வரு)

2. குரைஸியர்கள்குலக் கோத்திரமோ—திரு
கோமானருள்பெற்ற நேத்திரமோ
மறைவாயாவர்க்கருளுஞ் சந்தனமோ—மன்னர்
செய்கு அப்துல்கரீம் நாயகமே (வரு)

3. போதாவில் சித்திர சிகாமணியாம்
பொன்னுயிர் மீட்டிடும் பொற்பாதராம்
சாதாத்தென்னுந் தகைசற்குருவா—மொலி
செய்யதப்துல்கரீம் நாயகமே (வரு)

4. மங்கம்மாராணி மனம்பதற—அவள்
தங்கப்பல்லாக்குயேரும் வாகனம்
பங்கமுடன்மேரி கீழாலிறங்கிட
சங்கையாய்வந்து சரணம்செய்தாள் (வரு)

5. பூமலர்வீசிடு மீயகான் பள்ளிதனில்
தேன்மலரான திரவியமாம்
கோமானருள்கொண்ட ஈமாமெனுந்—திவ்ய
சீமான்அப்துல்கரீம் நாயகமே (வரு)

6 ஆவலுடன் பாதமனுதினம்—பணிந்திட
காவலாய்வந்து கதிகொடுத்தீர்
பாலன் முகைதீன் மஸ்தானுக்கே—புமது
பாக்கியமே பரமானந்தமே (வரு)

### பல்லவி.

குதுபுல்லகுதாபென்னும் ஜோதியே அனுஸில்
கொவ்தப்துல் காதிரென்னும் ஆண்டகையே (குது)

### அநுபல்லவி.

சிகமெங்கும் புகழ்பெற்ற செய்யிதபூஸாலிஹின்
மகவுளிவாயுதித்த மணிச்சுடரானவலி (குது)

சரணம்.

1. மண்டலமீதிலொரு முண்டம் தனை பெட்டியில்
மறைத்திட நண்பர்கள் தெண்டலித்தே
கண்டிட கண்ணால் நின்றிடவே சிறுவன்
முண்டகபாதம் தன்னில் தொண்டனென்றே
அண்டர் முனிவர் புயம் அண்டும்யன்பாதமென்றே
விண்டிடும் யாகொவ்து முஹ்யித்தீனே (குது)

2. பாதகுரடுமேலால் பரந்திடவே தீனோர்
பார்த்திடச்சபையோர் மகிழ்ந்திடவே
வேதமாய்காணிக்கை வைத்திடவே கள்ளர்
விழுந்தானே பாரினில் செத்திடவே
பாதாரவிந்தம்தனை ஆதாரமென்று செப்ப
பாதாளமேல் வருக பகர்கொடுத்தோர் (குது)

3. சின்கொண்டுபோனபெண்ணை அஹ்மதென்போன் தங்கள்
முன்பில்முறையிடவே தஞ்சமென்றே
கண்கண்ட ஜின்களிடம் காதிர்சொன்னாரென்றே
கதரிடவே மனம் பதரிடவே
கோனென்ற ஜின்களெல்லாம் கொவ்து பாதம் பணிந்து
கூட்டிடவே பெண்ணை மீட்டிடசெய்த ஒலி (குது)

4. பொழுதுதையமாய் வந்து பேசிடுமாம் தினம்
பழுதில்லா ஆண்டுகளும் பேசிடுமம்
தழுவிய மாதங்களும் பேசிடுமாம் தரணி
அழகிய நாள்களெல்லாம் பேசிடுமாம்
கழுகு சத்தமிடவே கருத்து பிசகிடவே
காளெண்டுருண்டிட களத்தோடசெய்தஒலி (குது)

5. சஞ்சலம் தீர்த்திடுவீர் நாயகமே ஒங்கள்
சரணகதி தருவீர் தாயகமே
பஞ்சரத்தினமென்ற பாக்கியமே யெங்கும்
பயகாம்பர் பேரரென்ற மாதவமே
கெஞ்சும் முகைதீன் மஸ்தான் கொஞ்சும் குருபதத்தை
தஞ்சம் தனக்கருளும் செஞ்சுடரான ஒலி (குது)

மீனாட்சி ஈன்ற மாபாலா—என்ற வர்ண மெட்டு.

## இந்துஸ்தான் தோடி—ஆதி தாளம்!

பல்லவி.

மதினாமாநகர்க்காட்சி மருமூது
மகள் ரசசாட்சி (மதினா)

அநுபல்லவி.

கதீஜாயீன்றிடுமாள்சி கண்காட்சி
பாத்திமா நாச்சி (மதினா)

தொகையறு.

பாவா ஆதமீதிருந்து பத்து அஞ்ராண்டினில்
பக்தினிலுத்த முத்தே
நாவரத்தின மெய்ச்சுடருய் நானிலமெல்லாம் சிறந்த
நாவினில் துதிக்கும் சித்தே.

சாணம்.

அன்பியா கோத்திரம் நீயே ஒன்பாதம்
நம்பினேன் தாயே (மதினா)

தொகையறு.

மகுட சிங்கந்ர ரஸியுல்லாவின் மனைவி
யென்ரமானே
விகடமா தர்கரசியான விந்தையே
செழுந்தேனே

சரணம்.

போத்திடும் பூரணம் நீயே பூபதியே
பாத்திமா தாயே (மதினா)

தொகையறு.

அச்சமுடன் மஹஷர் தன்னில் அரசர் கண்கள்
மூடிடுதிருகோனே
பச்சையிரு போர்வையுடன் பதிகள் சேரும்
மின்னலொளிதானே.

சரணம்

யெழுபது மாளிகைக்குள்ளே பாத்திமா
முழுமதிக்குள்ளே (மதினா)

தோகையரு.

தாபூரமான்ஷரீ பிர்தவ்ஸூ தனில் அரசி
யென்னும் மேரே
சாகரத்தினுள்ளே ஒரு சங்கின்ஓசை முழங்கும்
செல்வி நீரே

சரணம்.

இத்தருணம் தாஸனுமுஹூதீன் மஸ்தானும்
போத்திடும் சருணம் (மதீன)

முஹிய்தீன் ஆண்டவா என்ற மேட்டு.

இராகம்—கல்யாணி ரூபகம் தாளம்.

பல்லவி.

பாத்திமானுச்சி னர்
பாத கீத வேத போத (பாத்தி)

சரணம்

போத்தும்இன்சான் ஆலமே
முத்துநபியின் கோலமே
சித்துஅனு கூலமே
சேமந்தந்திட நாமமந்திர (பாத்தி)

சந்திரன்போ லுற்றவா
சுந்துஸூதனே புடுத்தவா
நந்தியான முற்றவா
தந்தைபோலே வந்தெனக்கருள் (பாத்தி)

சஞ்சலத்தை தீர்க்குவீர்
நெஞ்சம் இருளை போக்குவீர்
தஞ்சமெனே யாழுவீர்
தாயைப்போலே சேயனுக்கருள் (பாத்தி)

யெங்கும் பிர சங்கமே
தங்குமரை பொங்குமே
மங்கையர்க்கு சிங்கமே
மானேதேனே மரகதவடி (பாத்தி)

குல்லும் சபை　　இஸ்தானம்
வெல்லும் மறை　　வுஸ்தானம்
சொல்லு முஹ்தீன்　　மஸ்தானும்
சோபனம் பெற　　தாபரக்குறு　　(பாததி)

காட்சியிதன் காட்சியே யென்ற மெட்டு.

பல்லவி

மதினு　　சிங்காரமே
மாதவத்தோர் புகளும்　　(மதினு)

அனுபல்லவி

முச்சுடர்　　மெய்ச்சுடருய்
முழங்கிடும் தீபமொ　　(மதினு)

முத்தினில் திரண்டுருவாய் மும்மணியாய் வந்தவா
சித்ரதுல் முந்தஹாவில் சேரும் மயிலானவா
பத்தி அருவாஹு தன்னில் சித்தி நபியானவா

சரணம்

பூரண நூபதென்னும்　　போதம்
புருவத்திடையில் தரித்த　　ஆதம்
ஆரணத்தினில் துலங்கும்　　வேதம்

அலங்காரம்

யெங்கும் பிரகாசம்　　யிறையோனெழி வீசும்
துங்கமலர் வாசம்　　துரைமுஹம்மதுவின் மறைநேசம்(ம)

தாத்தினிலுதிக்கு மவ்சூத்ரபரமாய் நின்றவா
போத்தும் இன்சான் கமிலென்னும் புகழ்சிபத்தாய் வந்தவா
தோத்திரமாய் வந்ததிரு தூதரென்னும் முஸ்தபா

சரணம்

நேத்திரமாய் நின்றிலங்கும்　　ஜோதி
சூத்திர சுரூபமென்னும்　　ஆதி
கோத்திர குரைசியென்னும்　　நீதி

அலங்காரம்

இல்முல்யகீனாய் இலாஹால்யகீனாய்
அய்னுல்யகீனாய் அரசர்முகம்மதென்னும் (மதி)

சங்கைபோன்ற அப்துல்லாவின் செல்வதிருமோள்களும்
மங்கை ஆமினாவும் பெர்ரமைந்தரென்னும் ராசாளும்
தங்கும் புருகானில் வந்த தாஹாவென்னும் தாசாளும்

சரணம்

மக்கநகரில் பிரந்த கோமான்
ஹக்கநருள் பெற்றிலங்கும் சீமான்
தக்கபுகளான மகுட பூமான்

அலங்காரம்

கோடிபுண்யமோ கூடும்தவமோ
சாடிடும்கதமோ சிரேஸ்டர்முஹமதென்னும்(ம)

அந்தரத்தில் சந்திரனை ஆடிவரச்செய்தவா
சுந்தரச்சுடரொழிவு சூழ்ச்சகரமானவா
விந்தையாக வுச்சிதனில் விமரிசையாய் கண்டவா

சரணம்

கண்டகலிமாவுஞ்சொன்ன—காக்ஷி
சிண்டிடும்ஹபீபரசூ—தாழ்ச்சி
மண்டலமெல்லாயோமது—ஆழ்ச்சி

அலங்காரம்.

ஒதும்முஹாதீன் —மஸ்தானுக்கின்பம்
தீதுபோல்துன்பம்—தீர்திடும்கபிபதம் (மதி)

முற்றிற்று

மோக்ஷமேஞ்ஞான சற்தாற் என்றமேட்டு.

பதம் இராகம்—கல்யாணி அடைதாளம்

பல்லவி.

கோடிசமஸ்தானமொ—குருபாதத்தில் (கோ)

அநுபல்லவி

கத்தநின் திரு சுத்தமெய்குரு
முத்துநபியென்னும் சித்துஅனுகூல (கோ)

சரணம்.

இருண்டமேகங்கழேழும் திரண்டகுடையிட
சுருண்டிடும் அபூசஹில் பிரண்டிடநர்ப்பாதத்தில் (கோ)
மங்காதஜோதியென்னும்—சிங்காரதீபம்
தங்குமின்னலொழிவாம் தாஹாநபிபாதத்தில் (கோ)
மானுக்கு பிணையாம் மரியவிள்த்தோளும்
தீனுக்கு தேனதுவாம் தாசிம் நபிபாதத்தில் (கோ)
அண்டர்புகழும்கோடி முண்டகப்பாதம்தேடி
தொண்டன்முஹிதீன்மஸ்தர்ன் விண்டிடும் பொற்பாதத்தில்
(கோ)

பதம் இராகம்—காபி ஆதிதாளம்

பல்லவி.

நல்வாக்கு பெருஓமடி நபிபாதத்திலே (நல்)

அநுபல்லவி,

நற்பாதம் யெப்போதும் பொற்பாதநபிகதத்தில் (நல்)

சரணம்.

நம்மள்நாகை ருஜரிடம் அடி (நல்)

முத்தில் துலங்குமணி—ஆதி
முன்னுலிலங்குமணி
பத்திலுதித்தமணி—நல்
பயங்காம்பர் பாத்ததிலே (நல்)

ஸம்ஸென் னும் தாத்தொளிவாம்—இவர்
ஸா திகுலத்தெளிவாம்
ஸம்ஸென் னும் அய்னொளிவாம்—நபி
கா-ஹா-யா-அய்ன் ஸா திடத்தில் (நல்)

கல்லில் மரம்முளைத்த—இவர்
கத்தன் தனைஅடுத்த
வெல்லும் அருஸில்சென் ற—நபி
வேதாம்பர் பாதத்திலே (நல்)

ஆதியின் சமுகத்திலே—நபி
அத்தஹிய்யாத்தோதயிலே
நீதியாய் அமரரோதும்
னேத்ரகலிமா அஷ்ஹா துலே (நல்)

வுஹதாய் சிறந்தாள்ச்சி—நபி
வுலக அரசாட்சி
முஹ்யித்தீன்மஸ்தானுங்காக்ஷி
கண்டிடஅருள் கொண்டிடபதல் (நல்)

டண்டித மோதிலால் நேருவை பறிகோடுத்தோமே—என்ற மெட்டு

## ஹிந்துஸ்தான் தோடி. காபி ஆதிதாளம்

### பல்லவி.

அப்துல்கரீம் சாகிபுமேரே அருள்தருவீரா
அருள்தருவீரா வுல்லாசகெம்பீரா

### அநுபல்லவி.

முல்லையிருவாச்சி மணம்
முன்னால் துலங்கும்குணம்
மல்லிகைப்பூ வாடைவீசும் மலர்மணமோரே
மலர்மணமோரே நாளும் பூமணமோரே (அப்)

### தொஹையரு.

மங்காததீபமணி மகுமூதுகுலமென்னும் மாதவத்தோர்நிறைந்த
சிங்காரமாகயிவ்வுலகத்திலே சிதேவியாயுதித்த

சரணம்.

மண்டலமெல்லாம் சிறந்த மக்கநகரில் பிறந்த
ஆண்டகையே உமதுபாதம் அடிபணிந்தோமே
அடிபணிந்தோமே நாளும் கெதிஅடைந்தோமே (அப்)

தொகையரு.

சத்தியுள்ளமங்கம்மா பல்லாக்குமேவுடைய பாரினில் பரிதாபம்
சித்தியுட்சரணமே சரணமென்றிட செய்யிதே உமதுஅனுஸ்தா
பம்)

சரணம்.

தகதிமிதனத்தோங்க தாபரனுயிலங்க
ககமலர்சூழும்நகை காட்சிகண்டோராம்
காட்சிகண்டோராம் கதி மோட்சம்பெற்றோராம் (அப்

தொகையரு.

ஹக்கனருள்பெற்ற பெரியோரென்று உமது அடிகண்டின்பம்
கொண்டபைஸல்)
கைவிடாதென்மீது கருவென்றமந்திர காட்சியைதந்துகொள்ளல்

சரணம்.

ஹக்குல்யகீனரிந்த காமிலின்சானில்வந்த
திக்குதிசைகளெங்கும் தேடுவார்கோடி
தேடுவார்கோடி தினம் வருவார்நாடி (அப்)

தொகையரு.

தேசத்துராசர்களும் தேவஸ்தானமென்று தெரிசித்துநிற்பார்
கோடி)
நேசத்தையென்னாளும் நினைவிலும் கனவிலும் நினைத்துருகிநிற்பார்

தாசன் முஹ்தீன் மஸ்த்தான் நேசனுக்கன்புதந்த
வாசம் பொருந்தும் ரத்தின வதனசிங்காரா
வதன சிங்காரா தினம் புகழலங்காரா

## மங்கள வாழ்த்து,

### பல்லவி.

மங்களம் மங்களமே முஹம்மதர்க்கும்
மங்களம் மங்களமே

### அநுபல்லவி.

துங்கஆதியமைந்த ஆதம்ஹவ்வா அவர்க்கும்
சங்கையிபுராஹிம் நபிக்கும்
ஸாஷ்டாங்கம்சாரு உம்மா தனக்கு மங்களம். (மங்)

### சரணம்.

1. சுந்திரம் போலிலங்கும் யூசுபுநபி சொர்க்கப்பதிவாசராம்
சிந்தைமகிழும் சுலைஹாஉம்மா அவர்க்கும் சோபனமென் பதுவாம்
கந்தங்கமளுநபி
மூஸா அவர்களுக்கும்
சந்திரவடிவாயுதித்திடு
சாதையோதிடும்
சபறுதனக்கு மங்களம் (மங்)

2. வாசர்அய்யூபுநபிக்கும் வாழ்வரசியான ரஹுமத்தும்மா தனக்கும்
பாசர்ஸுலைமாநபிக்கும் பல்கீஸும்மா பண்புள்ளநாச்சி யார்க்கும்
நேசருல்லாஸறுன
நெயினர்முகம்மதர்க்கும்
தேசப்புகழும் ஹதீஜா
தேனின்பம்பொங்கு
மாயிஷாவுக்கு மங்களம் (மங்)

3. அண்ணலபூபக்கராம் உமருதுமான்லியார்ஹஸனுஸைனும்
பொன்னூஞ்சலாடும் பீவிபாத்திமாயெங்கும்பூரணப்பொற் பதியாம்

கன்னல்கபமுமெங்கள்
காரண சற்குருவாம்
கண்மணி முஹியத்தீன்
கொவ்தானவர்க்கும்
மங்களம் மங்களமே. (மங்)

4. நாடித்துதிசெய்தே னபிமார்கள்பாதம் நலவாய்சிரசில்வைத்தேன்
பாடிப்பதமுறைத்தேன் முஹைதீன்மஸ்தான் பணிந்து சரணஞ்செய்தேன்
வாடிமயங்குகின்ற
அடிமைக்கிருபைசெய்யத்
தேடுஞ்சபையோர்களுக்கும்
தீனோர்களுக்கும் மங்களம் மங்களமே (மங்)

## ஜைனு ஜப்பான் யென்ற மெட்டு

### பல்லவி

சாஹுல் ஹமீத் ஆண்டகையே
சாயுள்சமே தருகுவீர்

### சரணம்

செந்தாமரை மலரே
சாதத்தென்னும் சுடரே

### முடுக்கு

சொருண மாமணி
வருண மெய் துதி
சருண பதமே
தருணம் தந்திட (சாஹுல்)

மன்னா விநோத கப்பல் தகுர
கண்ணுடியால் அடைத்தவா

### சரணம்

கண்ணினால் நீர் ததும்ப
கானகக்குயிலாட

### முடுக்கு

தன்னால் ஆனந்தம்
முன்னில் பெருகிட
வுன்னிதமாகவே
சன்னதியில்வர (சாஹுல்)

யெங்கும் புகழ் சங்கமரே
தங்கும் நாகூர் சிங்கமே

சரணம்

மங்கை மனம் பதர
மரியெய் வரவளைத்த

முடுக்கு

துப்பர வாகவே
மெய்பொருள் கண்டிட
நர்ப்பொருளாகிய
பொர்பாதரே ஒலி (சாஹுல்)

தஞ்ச மென்றே கெஞ்சு ஓர்க்கு
சஞ்சலத்தை தீர்த்தவா

சரணம்

தஞ்சை மகராசன் பிணி
தாமித மில்லாமல் செல்ல

முடுக்கு

தாரணி தன்னிலே
பூரண மாகிட
ஆரணனர்ச்செய
காரணரே ஒலி (சாஹுல்)

பாசமுள்ளேன் முஹிதீன் மஸ்தான்
தாசன் துயர் தீருமே

சரணம்

தேசாதி தேசர் களும்
சேனுதி சேனை களும்

முடுக்கு

தேடிடும் சனங்கள்
கூடிடும் கோடியே
சாடிடும் பாதம்
பாடிட நர்க்கெதி (சாஹுல்)

முற்றிற்று.

ஆமீன்! யாரப்பில்! ஆலமீன்!

---

இந்த புஸ்தகம் கிடைக்குமிடம்:—

**பீ. சா. முகைதீன் மஸ்தான் லெப்பை,**

**மிய்ஹான் பள்ளி, ஹமீதியா ஸ்கூல்,**

(வல்லநாடு போஸ்டு)

# பிழை திருத்தம்.

| பக்க எண் | செய்யுள் எண் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 12 | 85 | 2 | ஆதிநபியின் ஷஅத்து | ஆதிநபியின்ஷபாஅத்து |
| | முனாஜாத்து | | | |
| 15 | 13 | 2 | குதுவுமார் | குதுபுமார் |
| ,, | ,, | ,, | கோனகுளே | கோனருளே |
| ,, | 19 | 1 | பேரின்பருன | பேரின்பறுன |
| ,, | 22 | 2 | வெந்தலிக்கு | வெந்தனுக்கு |
| ,, | ,, | ,, | பாத்திதுத்தே | பாத்திமுத்தே |
| | பதங்கள் | | | |
| 16 | 2 | 1 | யறிந்த்தொழுது | யறிந்துதொழுது |
| ,, | 7 | ,, | ஜிபுரீலுரைற்தார் | ஜிபுரீலுரைத்தார் |
| ,, | 8 | 2 | கட்டினதேரும் | கட்டினோராம் |
| 17 | 13 | 1 | சங்கிர்தக்குவாரும் | சங்கிர்தக்குருவாம் |
| ,, | ,, | 2 | திவாரும் | திருவாம் |
| 18 | 4 | 3 | மெளக்காரும் | மெனக்காரும் |
| 19 | 4 | 2 | ஸுஹூதெ | ஸுஹூதே |
| ,, | 7 | 2 | மேயருள் | மேறே |
| | நொண்டிச் சிந்து | | | |
| ,, | 2 | 1 | தளையழைத்தோர் | தனையழைத்தோர் |
| 20 | 7 | 4 | வந்தனமும் | அடித்தல் |
| 21 | 4 | 2 | யேரும்வாகனம் | மேதான்தகுற |
| | பல்லவி | | | |
| ,, | 1 | 1 | அனுஷில் | அருஷில் |
| | அநுபல்லவி | | | |
| 22 | 4 | 2 | பேசிடுமம் | பேசிடுமாம் |
| | பல்லவி | | | |
| 23 | 1 | 2 | மகள்ரசசாட்சி | மகளரசாட்சி |
| | தொகையரு | | | |
| ,, | 1 | 1 | அஞ்ராண்டினில் | அஞ்சுரெண்டினில் |
| ,, | தொகையரு | 1 | சிங்கநர | சிங்கார |
| 24 | ,, 3 | 1 | தாபரமாணி | தாபரமாமணி |
| 25 | அலங்காரம் | 2 | வின்மைநேசம் | வென்னும் |
| ,, | ,, | 3 | மவ்ரூத்ரபரமாய் | மவ்ரூதாபரமாய் |
| 26 | ,, | 4 | ராசாளும் | ராசராம் |
| ,, | ,, | 5 | தாசாளும் | தாசராம் |

| பக்க எண் | செய்யுள் எண் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 26 | சரணம் 2 | 2 | சிண்டிடும் ஹபிபாசஅ | விண்டிடும் ஹபீபரசன் |
| 27 | பதம் 2-ல் பல்லவி | 1 | த்தோளும் | த்தோரும் |
| ,, | சரணம் 1 | 4 | பயங்கம்பாத்ததிலே | பயகாம்பர்பாதத்திலே |
| ,, | ஷெடி 4 | 4 | அஷ¯ஹா துமேல | அஷ¯ஹ துலே |
| ,, | ,, | 4 | பதல் | ஜெய |
| 29 | தொகையரு 2 | 1 | சத்தி | பத்தி |
| ,, | சரணம் | 2 | நகை | நாகை |
| ,, | ,, | 1 | தாபரணுயிலங்க | தாபரருயிலங்க |
| ,, | தொகையரு 3 | 1 | பைலல் | பையல் |
| 30 | அநுபல்லவி | 1 | அமைமந்த | அமைத்த |
| 31 | சரணம் | 2 | சாதத் | சாதாத் |
| ,, | முடுகு 1 | 1 | ஆனந்தீம் | ஆனந்தம் |

இரண்டாம் பாகம் (அச்சில்) விரைவில் வெளிவரும்.